[பேராசிரியர் க. அன்பழகன்] 1989 பிப்ரவரி 20]

மாகத்தான் தற்போதுள்ள அரசாங்கத்தினுடைய நிதிநிலையில் வரவு-செலவுத் திட்ட அளவில் பல கடமைகளை நிறைவேற்ற முடியுமே தவிர, கல்லூரியை, அதுவும் மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப் போல, ஓலைக் கொட்டகைகளாகப் போட்டு, இட வசதி இல்லாமல் இப்படி ஒரு கல்லூரி தொடங்கப்பட்டிருக்கின்ற ஒரு நிலையில், அந்தக் கல்லூரியை எடுத்துக்கொண்டு, உடனடியாக அவை களுக்குத் தேவையான நிதிவசதிகளை வழங்கக்கூடிய நிலை அரசுக்கு இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். எனவே, நடைமுறையில் ஒழுங்குபடுத்துவதற்கு என் னென்ன செய்ய முடியுமோ, அவைகளைச் செய்வதற்கு இந்த அரசு தீவிரமான முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வட ஆற்காடு மற்றும் அண்ணா மாவட்டங்களில் மின்சாரம் சரியாக வராததால் விவசாயிகள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பெ. சு. திரு வேங்கடம், எஸ். பி. கண்ணன், நே. பிச்சாண்டி, வி. எம். தேவராஜ், அ. இராசேந்திரன், டி. பொன்முடி, கே. ஏ. செங்கோட்டையன், எஸ். டி. உகம்சந்த், துரை ராமசாமி, வே. நா. சுப்பிரமணியன். பி. மாரப்பன், வே. பெரியசாமி, வி. கே. சின்னசாமி, என். பழனி வேல், எஸ். ஏ. தங்கராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் குறிப்பாக வட ஆற்காடு மற்றும் அண்ணா மாவட்டங்களில் சென்ற ஒரு வார காலமாக மின்சாரம் சரியாக வராததால் விவசாயிகளின் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விரிவான அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது:

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1989 பிப்ரவரி 20 [திரு. கே. என். நேரு]

அறிக்கை.

1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் நாள் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 9 ஆம் நாள் முதல் கல்பாக்கம் அணு மின்நிலையத்தின் பிரிவுகள் ஒன்று மற்றும் இரண்டில் சில கோளாறுகளினால் இயந்திரங்கள் இயங்கவில்லை. நெய்வேலி அனல் மின் நிலையங்களிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழக்கமாக 900 மெகாவாட் மின்சக்தி வழங்கப்படும். 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7 ஆம் நாள் முதல் இதில் 150 மெகாவாட் அளவு குறைவேற்பட்டுள்ளது ?

இராமகுண்டம் மற்றும் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு பெரிய அளவில் மின் சக்தியைப் பெற்று உதவுகிற திருப்பெரும்புதூர் 400 கிலோவாட் 315 எம்.வி.எ. மின் மாற்றிதான் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய ஒன்றாகும். இது 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20 ஆம் நாளன்று பழுதடைந்ததனால் வேறு குறைந்த அழுத்தமுள்ள நீண்ட மின்பாதைகள் வழியாக மின் சக்தியை மின்வாரியம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. கடந்த 1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 ஆம் தேதியன்று எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய தீ விபத்தில் 110 மெகா வாட் திறன் கொண்ட பிரிவு மூன்று மற்றும் பிரிவு நான்கிலுள்ள பல நுணுக்கமான பொறிகளும் கேபிள்களும் எரிந்து போயின. மேலும் 25 எம்.வி.எ. திறன் கொண்ட ஒரு மின் மாற்றியும் சேதமடைந்தது. அதன் பின்னர் 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25 ஆம் நாளன்று 110 மெகாவாட் திறன் கொண்ட ஐந்தாவது பிரிவிலும் தீவிரமாக பழுது ஏற்பட்டது. இதனால் சென்னைப் பெருநகரம் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலுள்ள நுகர்வோருக்கு கடந்த சில வாரங்களாக மின் அழுத்தக் குறைவு காரணமாக சரியான அளவில் மின்சக்தி வழங்க இயலவில்லை. சில நேரங்களில் மின்சக்தி வழங்குவதை நிறுத்தி வைக்கும்படியாயிற்று. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்படும் மின் சக்தியைச் சீராக்கும் பொருட்டு 1989 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7 ஆம் நாள் முதல் எல்லா விவசாய பம்பு செட்டுகளுக்கும் பகலில் நான்கு மணி நேரத்திற்கும் இரவில் ஆறு மணி நேரத்திற்கும் மின் விசை வழங்கிட கீழ்க்கண்ட வகையில் மாற்றியமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படியே கீழ்க்கண்டவாறு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பிரிவு அ.—காலை 6 மணி முதல் 10 மணி வரை.
நள்ளிரவு 12 மணி முதல் காலை 6 மணி வரை.

பிரிவு ஆ.—காலை 10 மணி முதல் நண்பகல் 2 மணி வரை.
இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை.

பிரிவு இ.—மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை.
இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரை.

எந்தெந்தப் பகுதியில் எப்போது மின்சாரம் வழங்கப்படும் என்பது அந்தந்தப் பகுதியில் உள்ள மேற்பார்வைப் பொறியாளரால் மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் காத்துக் கிடக்கும் தேவை இல்லை.

(2 போர்க்கால அடிப்படையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்பாக்கத்தில் முதல் பிரிவு இயக்கப்பட்டுள்ளதால் நிலைமை சற்று சீரடைந்துள்ளது. கூடிய விரைவில் மின் உற்பத்தி மற்றும் விநியோகப் பிரிவுகளை மறுபடியும் துரிதமாக இயக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இது தொடர்பாக இங்கு எழுப்பிய பலருள், ஆளுங்கட்சி சார்பில் ஆளுக்கு ஒரேயொரு வினாவை மட்டும் தொடுக்க வேண்டும். எவரேனும் இருவர்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கான வாய்ப்பு மற்றவர்களுக்குப் போகும்.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய போளூர் தொகுதியில் மின்சாரம் பகலிலே 4 மணி நேரமும், இரவிலே 6 மணி நேரமும் கொடுக்கப்படுகிறது. விவசாயிகளின் நலனைக் கருதி, அதைப் பகலிலே 6 மணி நேரமும், இரவிலே 4 மணி நேரமாகவும் மாற்றிக் கொடுப்பதற்கு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு அளிப்பாரா என வினவுகிறேன்.

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு கொடுப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. முயற்சிகள் வெற்றி பெற்றவுடன் நிச்சயமாகப் பகலிலே 6 மணி நேரமும், இரவிலே 4 மணி அல்லா மல், இரவிலும் 6 மணி நேரம் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

*திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று திடீரென பல்வேறு இடங்களில் கோளாறுகள் ஏற்படுவதற்குப் பொறுப்பான அதிகாரிகள் சரிவர நடவடிக்கை எடுக்காததுதான் காரணம். ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று மின்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் எந்த அதிகாரி தவறு செய்தாலும், அவர் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அ.இ.அ.தி.மு.க. (ஜெ) கட்சி சார்பில் இருவர்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்தில், பணி துரிதமாக முடிவுற்றவுடனே தருவதாகச் சொல்லுகிறார்கள். தற் காலிகமாகவாவது வேறு மாநிலத்திலிருந்து மின்சாரத்தை வாங்கி இந்தக் குறையைத் தீர்த்தால், விவசாயிகளுக்கு அவர் களுடைய பயிரைக் காப்பாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, வெளி மாவட்டத்திலிருந்து மின்சாரம் வருவதற்கான அந்த லைனில் தான் பழுது ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இந்த அறிக்கை யில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த டிரான்ஸ்மீட்டர் களைப் பழுது பார்ப்பதற்கான செயல்கள் முடுக்கி விடப்பட்டிருக் கின்றன. பழுது பார்த்தவுடன் வெகு விரைவிலே மின்சாரத்தைச் சரியான முறையில் விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரக் கோளாறுகளினால் பல விவசாயப் பெருமக்களுடைய பம்பு செட்டுகள் பழுதடைந்திருக்கின்றன. அதனால் அவர்கள் பெரிதும் பாதிப்பிற்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசின் சார்பாக ஏதாவது நிவாரணம் வழங்கப்படுமா, உதவிகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. உறுப்பினர் அவர்கள் மேலும் விரிவான விளக்கத்தைக் கேட்கிறார்கள். வேண்டுமானால், தனிக் கேள்வியாகப் போட்டு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) சார்பில் ஒருவர்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில வாரங்களாக அண்ணா மாவட்டத்தில் மின்சார விநியோகத்தில் தெளிவான நிலை இல்லை என்று நாங்கள் பல முறை சொல்லியிருக்கிறோம். இந்தக் குறிப்பிலே கூட என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால், இந்த மாறுதல் அறிவிப்பு சம்பந்தமாகப் பொறியாளர் மூலமாக மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் கேட்டுக் கொள்வது அந்த மின் உபயோகிப்பாளர்களுக்கு, இத்தனை மணி நேரம் இன்னின்ன நேரத்தில் மின்சாரம் வரும் என்று தெளிவாக உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா இல்லையா? பொதுவான முறையில் மக்களுக்கு அறிவித்தால் அவர்கள் எப்படிப் புரிந்துகொண்டு அதை உபயோகப்படுத்த முடியும் என்பது ஒன்று, இரண்டாவது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதித்தது ஒன்று (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, மின்சாரம் விவசாயிகளுக்கு எந்த நேரங்களில் வழங்கப்படும் என்பதை ஏற்கெனவே அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் பத்திரிகைகள் வாயிலாகவும், தனிப்பட்ட சுற்றறிக்கை மூலமாகவும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். உறுப்பினர்

1989 பிப்ரவரி 20] [திரு. கே. என். நேரு]

சொன்ன பகுதியிலே தெரிவிக்கப்படவில்லையா என்பதை விசாரித்து விவசாயிகள் அனைவருக்கும் தெரிவிக்கின்ற முறையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: இன்னொரு கேள்வி அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதிக்க இயலாது. அருள்கூர்ந்து அமருங்கள் (குறுக்கீடு). அவை மரபை மீறாமல் அருள்கூர்ந்து அமருங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வந்ததற்கு ஒரு சிறு விளக்கத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன. மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையிலே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை என்னவென்றால் "பிரேக் டவுன்" என்பது அவர்களுக்கே தெரியாமல் ஏற்படுவது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் முன் கூட்டியே எந்த விவசாயிக்கும் தெரிவிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் கூட 'பிரேக் டவுன்' ஏற்பட்ட உடனேயே அந்தப் பகுதிக்கு அறிவிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்கும்.

4. அறிவிப்பு.

மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (திருத்த) சட்ட முன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :